வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3959/ஆ5/2026 நாள். 08.2026

பொருள் பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் Eco Club Mission LiFE Portal–ல் Eco Club Registration விவரங்களை பதிவு செய்தல் – இக்கல்வி ஆண்டில் – பள்ளி வளாகங்களில் மரக்கன்றுகள் நடுதல் விவரங்கள் அளித்தல் – தொடர்பாக.

பார்வை தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 032844/எம்.1/அ2/2025, நாள் .08.2026.

பார்வையில் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை அரசு, அரசு உதவிபெறும் தனியார், தொடக்க, நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றத்தினை Mission Life Portal–இல் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

மேலும் வேலூர் மாவட்டம் சார்பாக 89000 மரக்கன்றுகள் நடவு செய்ய பார்வையில் காணும் செயல்முறைகளின் படி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அந்த இலக்கினை அடைய துரித நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக அரசு, அரசு உதவி பெறும் தனியார், தொடக்க, நடுநிலை. உயர்நிலை, மற்றும் மேல்நிலை பள்ளிகளில் கீழ்கண்டவாறு மரக்கன்றுகள் நடவு செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்படுகிறது.

72 உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா 100 வீதம் 7200 மரக்கன்றுகள்

85 மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா 125 வீதம் 10625 மரக்கன்றுகள்

341 மெட்ரிக் பள்ளிகளுக்கு தலா 100 வீதம் 34100 மரக்கன்றுகள்

779 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 50 வீதம் 38950 மரக்கன்றுகள்

எனவே தங்கள் பள்ளிகளுக்கு தேவையான மரக்கன்றுகள் விவரத்தினை இணைக்கப்பட்டுள்ள கூகுள் படிவத்தில் 27.08.2026 அன்று மாலைக்குள் பதிவு செய்ய அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – கூகுள் படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்

அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
வேலூர் மாவட்டம்.
(உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)